## தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 135/பேரூ/2022**

**நாள்: 19.10.2022**

திரு. R. சோமசுந்தரம்,
பெண்ணாடம், கடலூர் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பெண்ணாடம் பேரூராட்சி, கடலூர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சிக்குட்பட்ட 343, மெயின் ரோடு, பெண்ணாடம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. R. சோமசுந்தரம் என்பவரின் 24.08.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.08.2022ல் பெறப்பட்டு, 135/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சிக்குட்பட்ட 343, மெயின் ரோடு, பெண்ணாடம் என்ற முகவரியைச் சேர்ந்த திரு. R. சோமசுந்தரம் தமது 24.08.2022 நாளிட்ட புகார் மனுவில் கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பெண்ணாடம் பேரூராட்சி எல்லையில் தனது குடும்ப இடத்தில் அமைக்கப்பெற்ற மனைப்பிரிவுகளுக்கு (unapproved Layouts) அரசாணை (நிலை) எண்.78 வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத் துறை நாள் 4.5.2017ல் அனுமதியற்று அமைக்கப்பெற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்திட வெளியிடப்பட்ட அரசாணையின் அடிப்படையில், வரன்முறைக் கட்டணமாக ரூ.2,64,390/– மற்றும் வளர்ச்சிக் கட்டணமாக ரூ.1,88,850/–ம் 2018ஆம் ஆண்டே செலுத்தப்பட்டுவிட்ட நிலையில், பணம் செலுத்தி 44 மாதங்கள் கடந்தும் விருப்பு வெறுப்பு காரணமாக இயற்கை நீதிக்கு மாறாகவும், முன்னுரிமையின்றி தனக்குப் பின்னால் உள்ளவர்களுக்கு தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதனைச் சுட்டிக்காட்டி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு மனு அளித்ததாகவும், மாவட்ட ஆட்சியரின் 15.6.2022 நாளிட்ட கடிதத்தின்படி உதவி இயக்குநர், கடலூர் மற்றும் செயல் அலுவலர், பெண்ணாடம் அவர்களை உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது என்றும், ஆனால் இக்கடிதம் பெற்ற பின்னரும்,

இன்றுவரை வேலை ஆரம்பிக்கப்படவில்லை எனவும், எனவே இது குறித்து விசாரணை மேற்கொண்டு R.S.No.252/2 – 0.48 Acre Radhakrishnan Avenue, R.S.No.262/4B – 35.1/2 cent Krishna Nagar Extension and in R.S.No.262/4A – 37.1/2 cent Krishna Nagar மனைப்பிரிவுகளுக்கு தார்சாலை அமைத்திட உத்தரவிடுமாறு கோரியுள்ளார். மனுதாரர் தனது புகார் தொடர்பாக அரசாணை நகல் மற்றும் ஆதார ஆவணங்களையும் தனது புகார் மனுவுடன் இணைத்தனுப்பியுள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு மீது பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை இம்முறைமன்ற நடுவ 29.8.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது. இதனிடையே, மனுதாரரின் புகார் மனு மீதான நேரடி விசாரணை 26.09.2022 அன்று எடுத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டு, மனுதாரர் மற்றும் பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு 19.9.2022 அன்று அழைப்பாணைகள் அனுப்பிவைக்கப்பட்டன. பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அழைப்பாணை மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பிவைக்கப்பட்டது. மனுதாரர் திரு. R. சோமசுந்தரம் 26.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் “பெண்ணாடம் பேரூராட்சியில் எனது குடும்பத்திற்குச் சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்ட மனைப்பிரிவுகள் உரிய அங்கீகாரம் பெற்று வரன்முறைசெய்யப்பட்டன. அதற்கான வளர்ச்சிக் கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் ஆகியவை என்னால் 2018ஆம் ஆண்டே செலுத்தப்பட்டுவிட்டது. கடந்த 44 மாதங்கள் ஆன பின்னரும், எங்களது மனைப்பிரிவுகளில் பேரூராட்சியினால் தார்சாலை அமைக்கப்படவில்லை. எனக்குப் பின்னர் 10.6.2019ல் பணம் செலுத்திய அண்ணாமலைநகர் மனைப்பிரிவு அபிவிருத்தியாளருக்கும், அதேபோன்று முறையே 21.1.2019 மற்றும் 17.7.2020ல் அபிவிருத்திக் கட்டணம் செலுத்திய ஏழுமலையான் நகர் மற்றும் செந்தூர்வேலன் நகர் மனைப்பிரிவுகளுக்கு தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. எனது மனைப்பிரிவுகளுக்கு தார்சாலை அமைப்பது குறித்து மாவட்ட ஆட்சியர், பேரூராட்சிகளின் ஆணையாளர், உதவி இயக்குநர் ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, முன்னுரிமை அடிப்படையில் எங்களது மனைப்பிரிவுகளில் தார்சாலை அமைத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது 24.8.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையின்போது அளித்துள்ள ஆவணங்களின்படி, தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுதாரரால் கோரப்பட்டுள்ள விவரங்களுக்கு பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 02.09.2022 நாளிட்ட கடிதத்தில் “வள்ளியம்மை நகர், எல்லையம்மன் கோவில் நகர் மற்றும் செந்தூர்வேலன் நகரில் O&M Scheme 2020-2021ல் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கப்பட்டது” என்ற தகவலும், உரிய ஒப்புதலின்றி அமைக்கப்பட்ட மனைப்பிரிவுகள் அரசாணையின்படி வரன்முறை செய்யப்பட்ட தேதி குறித்த விவரப் பட்டியலும் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்பட்டியலின்படி சர்வே எண்.363/1 மற்றும் பலவற்றில் அமைக்கப்பட்டுள்ள அண்ணாமலைநகர் மனைப்பிரிவு 10.6.2019லும், சர்வே எண்.350/2B மற்றும் பலவற்றில் அமையப்பெற்றுள்ள ஏழுமலையான்நகர் மனைப்பிரிவு 21.01.2019லும்,

சர்வே எண்.306/3B மற்றும் பலவற்றில் அமையப்பெற்றுள்ள செந்தூர்வேலன் நகர் 17.7.2020லும் வரன்முறைபடுத்தப்பட்டுள்ளன என்ற விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன.

4. கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பா. பாஸ்கரன் என்பவர் 26.9.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள மனைப்பிரிவுகளான ராதாகிருஷ்ணன் அவின்யூவிலுள்ள சாலைகள், கிருஷ்ணா நகர் மற்றும் கிருஷ்ணா நகர் விரிவாக்கத்தில் அமையப்பெற்றுள்ள மனைப்பிரிவுகளில் திட்டப் பணிகளின்கீழ் தார்சாலைகள் அமைப்பது குறித்து பேரூராட்சி உதவிப் பொறியாளரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. திருச்சிராப்பள்ளி மண்டல பேரூராட்சிகளின் செயற் பொறியாளர், கடலூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மண்டலங்களுக்கு அனுப்பியுள்ள 27.8.2022 நாளிட்ட கடிதத்தில் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ளதால் தற்போது சாலைப்பணிகளை மேற்கொள்ளவேண்டாமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், மனுதாரரின் மூன்று மனைப்பிரிவுகளிலும் முன்னுரிமை அடிப்படையில் தார்சாலைகள் அமைத்திட உரிய அனுமதி பெற்று, பேரூராட்சியால் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்கிற விவரத்தினை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மனுதாரருக்குப் பின் அபிவிருத்திக் கட்டணம் செலுத்திய ஒருசில மனைப்பிரிவுகளில் அப்போதைய செயல் அலுவலரால் தார்சாலை அமைக்கப்பட்டுள்ளன என்கிற விவரத்தினையும் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இம்முறைமன்றத்தில் என்னால் இன்று சமர்ப்பிக்கப்படும் எனது 26.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக பதிவுசெய்துகொள்ளும்படியும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்றேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 26.09.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் மனுதாரரின் மனைப்பிரிவுகளில் சாலைவசதி மேற்கொள்ள பேரூராட்சி உதவிப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டது என்றும், மேற்படி மனைப்பிரிவுகளில் உள்ள சாலைகளுக்கு திட்டப்பணிகளின்கீழ் சாலை வசதி செய்துகொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், இதன் விவரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டு, அதன் நகல் மனுதாரருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், ராதாகிருஷ்ணன் அவின்யூவில் உள்ள இரண்டு சாலைகளுக்கு 84 மீட்டர் சாலையும், கிருஷ்ணாநகர் மனைப்பிரிவிலுள்ள 20 அடி சாலைக்கு 63.1 மீட்டர் சாலையும் மற்றும் கிருஷ்ணாநகர் விரிவாக்கத்தில் உள்ள 20 அடி சாலைக்கு 63.1 மீட்டர் அளவுகள் உள்ள சாலையும் திட்டப்பணிகளின்கீழ் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

6. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் அவரது வாக்குமூலம், பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட 26.09.2022 நாளிட்ட விளக்க அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- அரசாணை (நிலை) எண்.79 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (மேம்பாட்டுத்) (UD4(3)) துறை, நாள் 04.05.2017ல் பிறப்பிக்கப்பட்ட Notificationன்படி "The Tamil Nadu Regularisation of Unapproved Layouts and Plots Rules, 2017; 4.5.2017 நாளிட்ட தமிழக அரசின் சிறப்பு அரசிதழில் (Extraordinary Gazette) வெளியிடப்பட்டுள்ளது தெளிவாகிறது
- It exempts all unapproved layouts, where any or all plots are sold and registered on or before the 20th October 2016 and all unapproved plots which are sold and registered on or before the 20th October, 2016 from the operation of all the provisions of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972) and the Governor makes rules for regularization of such unauthorized layouts and plots under Section 122 of the said Act.
- மேற்கண்ட அரசாணையின்படி கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், பெண்ணாடம் பேரூராட்சி எல்லையில் சர்வே எண்.252/2 0.48 ஏக்கரில் அமைக்கப்பெற்ற ராதாகிருஷ்ணன் அவின்யூ, சர்வே எண்.262/4Bயில் 35.1/2 சென்டில் அமையப்பெற்ற கிருஷ்ணாநகர் விரிவு மற்றும் சர்வே எண்.262/4Aவில் 37.1/2 சென்டில் அமைந்துள்ள கிருஷ்ணா நகர் மனைப்பிரிவுகளுக்கு ரூ.2,64,390/– வரன்முறை கட்டணமாகவும், ரூ.1,88,850/– வளர்ச்சிக் கட்டணத்தினையும் 2018ஆம் ஆண்டே செலுத்திவிட்ட நிலையில், அவரது மனைப்பிரிவுகளில் தார்சாலை இன்னமும் அமைக்கப்படவில்லை என்பதும், அவருக்குப் பின்னர் வரன்முறை செய்யப்பட்ட மனைப்பிரிவுகளின் சிலவற்றில் தார்சாலை பெண்ணாடம் பேரூராட்சியினால் அமைத்துத்தரப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேலும் அவர் அனைத்து அலுவலகங்களுக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் புகார் மனு அளித்துள்ளதும், இதுவரை அந்த மனைப்பிரிவுகளில் தார்சாலை அமைக்க எந்தவொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் அறியமுடிகிறது.
- மனுதாரரின் மனைப்பிரிவுகளுக்கு வரன்முறை கட்டணம் ரூ.2,64,390/–ம், அபிவிருத்திக் கட்டணமாக ரூ.1,88,850/–ம், ஆக மொத்தம் ரூ.4,53,240/–ஐ 2018ஆம் ஆண்டே வங்கி மூலம் செலுத்தியுள்ளதும் தெளிவாகிறது.
- அரசாணையின்படி Amount levied towards development charges to be kept in separate account:- The development charge collected by the respective local bodies shall be credited into a separate account and shall be used to fund amenities and infrastructure development programs within the local body jurisdiction including meeting of all State share under the Centrally sponsored Schemes என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையிலும், மனுதாரரின் மனைப்பிரிவுகளுக்கு தார்சாலை கடந்த நான்கு ஆண்டுகளாக அமைத்துதரவில்லை; பின்னர் வரன்முறை செய்யப்பட்ட மனைப்பிரிவுகள் சிலவற்றில் பெண்ணாடம் பேரூராட்சியினால் தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.
- கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்ட புகார் மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, அதன் விவரத்தினை மனுதாரருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அனுப்பிவைக்குமாறு 15.6.2022 நாளிட்ட கடிதத்தில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், கடலூர் மற்றும் பெண்ணாடம் பேரூராட்சி

செயல் அலுவலர்களை கேட்டுக்கொண்டுள்ளார். இதற்குப் பின்னரும், பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் மெத்தனமாக இருந்துள்ளார். இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

- கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக வரன்முறை கட்டணம் மற்றும் அபிவிருத்திக் கட்டணம் செலுத்திய மனைப்பிரிவுகளுக்கு சாலை வசதி அமைத்துத் தராததும், மனுதாரருக்கு பின்னர் வரன்முறை செய்யப்பட்ட மனைப்பிரிவுகளில் தார்சாலை அமைத்துத் தந்துள்ளதும் விதிகளுக்கு முரணானதாகும். இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்க விழைகிறது.
- மேலும் செலுத்தப்பட்ட அபிவிருத்திக் கட்டணங்களை தனி கணக்குத் தலைப்பில் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் வைத்திருப்பதும் அக்கட்டணத் தொகை, அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமெனவும் அரசாணையில் தெளிவு படுத்தப்பட்டுள்ள போதிலும், மனுதாரருக்கு இதுவரை அடிப்படை வசதிகளை பெண்ணாடம் பேரூராட்சி செய்து கொடுக்காதது குறித்து முறையான காரணங்கள் எதனையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கவும் தவறியுள்ளார்.
- விதிகளுக்கு முரணாக மனுதாரருக்கு பின்னர் பணம் செலுத்தி வரன்முறைபடுத்தப்பட்ட மனைப்பிரிவுகளுக்கு ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் அப்போதைய செயல் அலுவலரால் தார்சாலைகள் அமைத்துத்தரப்பட்டுள்ளன என்று பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஏதோ உள்நோக்கத்துடன் வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாரபட்சத்துடன் பேரூராட்சி செயல் அலுவலர் நடந்துகொண்டுள்ளதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

72 வயதான முதியவரை, நியாயமான கோரிக்கைக்காக கடந்த நான்கு ஆண்டுகளாக பெண்ணாடம் பேரூராட்சி நிர்வாகம் அலைய விட்டுள்ளதும், இது வரை அவருக்கு சாதகமான பதிலைக்கூட பேரூராட்சி நிர்வாகம் வழங்காததும் மிகவும் மனிதாபமானமற்ற மற்றும் கண்டனத்திற்குரிய செயல் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

மேலும் செயல் அலுவலர் இப்பணிகளை விரைந்து மேற்கொண்டு முடித்து அதன் விவரத்தினை பேரூராட்சிகளின் ஆணையாளருக்கும் மற்றும் இம்முறைமன்ற நடுவத்திற்கும் உரிய புகைப்பட ஆதாரங்களுடன் அறிக்கை அளிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார். வரும் **2023** ஜனவரி மாதத்தில் மனுதாரரின் கோரிக்கைகளை நிறைவேற்றிட உரிய ஆயத்தப் பணிகளையும், நிர்வாக ஒப்புதல்களையும் பெற்று அதன் பின்னர் இரண்டு மாத காலத்திற்குள் சாலை அமைக்கும் பணிகளை மேற்கொண்டு முடித்திட வேண்டுமெனவும் பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

நான்கு வருடங்களுக்கு முன் 2018ஆம் ஆண்டிலேயே வரன்முறை மற்றும் வளர்ச்சிக் கட்டணங்களை மனுதாரர் செலுத்திய பின்னரும் நடவடிக்கை எடுக்காமல் இருந்தது கண்டிக்கத்தக்கது. இவருக்குப் பின் கட்டணங்கள் செலுத்தியவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருப்பது கடுமையான கண்டனத்திற்குரிய செயல். நிர்வாகத்தை கேலிக்கூத்தாக்கும் செயல். தற்போதைய செயல் அலுவலரும் கடந்த ஓராண்டாக ஒன்றுமே இதுகுறித்து

நடவடிக்கை எடுக்கவில்லை. உதவி இயக்குநரும் பாராமுகமாகவும், பொறுப்பற்ற முறையிலும் இருந்துள்ளார். சம்மந்தப்பட்ட செயல் அலுவலர்கள், உதவி இயக்குநர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து உரிய தண்டனைகளை வழங்கிட பேரூராட்சிகளின் ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார். இதுபோன்ற நடவடிக்கைகள் இனி நிகழாவண்ணம் சுற்றறிக்கை அனுப்பிடவும் பேரூராட்சிகளின் ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார். இந்த நிகழ்வு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலரின் கவனத்திற்கும் எடுத்துச்செல்லப்படுகிறது.

**2022**ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் **19**-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. சோமசுந்தரம்,
   **343,** மெயின் ரோடு, பெண்ணாடம் மற்றும் அஞ்சல்,
   கடலூர் மாவட்டம்–**606 105.**
2. செயல் அலுவலர்,
   பெண்ணாடம் பேரூராட்சி,
   பெண்ணாடம், கடலூர் மாவட்டம்–**606 105.**
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும்
   குடிநீர் வழங்கல் துறை, தலைமைச் செயலகம்,
   சென்னை–**600 009.**
4. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
   பேரூராட்சிகளின் ஆணையரகம்,
   நகர் நிர்வாக அலுவலகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–**28.**
5. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   கடலூர் மாவட்டம், கடலூர்.
6. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   கடலூர் மண்டலம், கடலூர்
7. இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
   இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

**செயலாளர்.**